**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 147 of 2023**

**Prosecution Witness : PW11**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : திருமதி. புனிதவள்ளி | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**(Accused Present)**

**Dated.05.08.2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது சிறுகனூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போது இலால்குடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 01.06.2023ம் தேதி நான் நிலைய பொறுப்பில் இருந்த போது பியூலா எஸ்தர் என்பவர் நிலையம் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண். 262/2023, இதச பிரிவுகள் 279, 337, 304(A)ன் கீழ் 09.30 மணிக்கு வழக்கினை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.8/அ.சா.11** ஆகும். பதிவு செய்யப்பட்ட வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 01.06.2023ம் தேதி காலை 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பிளவேந்திரன், பவுலோஸ் சைலஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். பார்வை மகஜர் சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து

வாக்குமூலம் பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.9/அ.சா.11** ஆகும். என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பார்வை மகஜரில் காலை 10.45 மணி என தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வழக்கில் இறந்துபோன ஜான் பிரான்சிஸ் என்பவரின் பிரேதத்தின் மீது கடந்த 01.06.2023 ம் தேதி காலை 11.30 மணியளவில் இலால்குடி அரசு மருத்துவமனையில் உள்ள பிரேதகிடங்கில் வைத்து பஞ்சாயத்தார் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். ஜான் பிரான்சிஸ் என்பவரின் பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.10/அ.சா.11** ஆகும். பின்னிட்டு இவ்வழக்கில் இறந்துபோன பிரேதத்தினை பிரேத பரிசோதனைக்காக சுரேஷ்குமார் தலைமை காவலர் மூலம் வேண்டுகோள் கடிதம் அனுப்பினேன். பட்டியல் சாட்சிகளான 1 முதல் 8 வரை தனித்தனியாக விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரிந்து எதிரியை தேடி வந்த நிலையில் இவ்வழக்கின் எதிரியை கடந்த 01.06.2023 ம் தேதி நிலையத்தில் ஆஜரான எதிரியை 17.00 மணிக்கு குற்ற காரணம் கூறி கைது செய்து தக்க இருநபர் ஜாமீனில் விடுவித்தேன். சாட்சிகளின் விசாரணையிலிருந்து பேருந்தில் பயணம் செய்த அனைவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் மற்றும் மருத்துவமனை சென்று சிகிச்சை பெறவில்லை என தெரியவந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவு 279, 337, 304(A)லிருந்து 279, 304(A) ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை **அ.சா.ஆ.11/அ.சா.11** ஆகும். என்னுடைய முதல் விசாரணையை முடித்து மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர்

பார்வைக்கு வைத்ததேன். காவல் ஆய்வாளர் விசாரிக்க விவரம் சொன்னேன்.

<u>**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**</u>

நான் எப்போது வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன் என்றால் 02.06.2023 அன்று காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். நேரம் ஞாபகமில்லை. என்னை காவல் ஆய்வாளர் இந்த வழக்கு தொடர்பாக எந்த தேதியில் விசாரித்து வாக்குமூலம் பெற்றார் என்றால் 17.06.2023 அன்று விசாரித்து வாக்குமூலம் பெற்றார். நான் 02.06.2023 அன்று வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்துவிட்ட நிலையில் என்னை 15 நாட்கள் காலத்தாமதமாக 17.06.2023 அன்று தான் காவல் ஆய்வாளர் விசாரணை செய்தார் என்றால் சரிதான். அ.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் புகார் காவல் நிலையத்தில் உள்ள காவலர்களால் எழுதப்பட்டுள்ளது என சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அது தவறு ஆகும். நான் சம்பவ இடத்திற்கு செல்லும் போது விபத்தை ஏற்படுத்திய பேருந்து, இறந்துபோன நபரின் பிரேதம் ஆகியவை சம்பவ இடத்தில் இருந்ததா என்றால் விபத்தை ஏற்படுத்திய பேருந்து மட்டும் இருந்தது, இறந்துபோன நபரின் பிரேதம் இல்லை. நான் மாதிரி வரைபடத்தில் பேருந்து குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விபத்திற்குள்ளான இருசக்கர வாகனம் எந்த திசையிலிருந்து எந்த திசையை நோக்கி வந்தது என்றால் டோல்கேட்டிலிருந்து இலால்குடி செல்லும் சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தது. விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் பேருந்து எந்த திசையிலிருந்து எந்த திசையை நோக்கி சென்றது என்றால் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றது. இவ்வழக்கில் பட்டியல் சாட்சி

ராஜா என்னுடைய விசாரணையில் இறந்துபோன ஜான்பிரான்சிஸ் திருச்சி–இலால்குடி சாலையில் பத்மாவதி பேலஸ் திருமண மண்டபம் அருகில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி அவரது இருசக்கர வாகனத்தில் வந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எதிரிக்கும், இந்த விபத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், இறந்துபோன நபரின் அஜாக்கிரதையாலும் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்கு ஏற்றவாறு பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.08.05 16:42:14 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி